புரட்சிப்
# பெரியார் முழக்கம்
www.dvkperiyar.com



திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • ஜுலை (JULY) 30, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 32 • விலை(PRICE) ரூ.6.00

## கழகத் தோழர்கள் போராட்டம்
# நீட் தேர்வை நீக்கு

**கோவையில்:** ஜுலை-22 அன்று அனைத்து முற்போக்கு இயக்கங்கள் சார்பில் நடைபெற்ற நீட் எதிர்ப்பு ஆர்பாட்டத்தில் கோவை மாவட்டக் கழகம் சார்பில் மாநகரச் செயலாளர் வெங்கட் கண்டன உரை ஆற்றினார்.






ஜுலை-26, அன்று மாலை 5 மணி அளவில் கோவை காந்திபுரம் பகுதியில் அனைத்துக் கட்சிகள் சார்பாக நீட் தேர்வுக்கு எதிரான முழக்கங்களுடன் எழுச்சியோடு மனிதச் சங்கிலி போராட்டம் நடைபெற்றது கோவை மாவட்டக் கழக தோழர்கள் மற்றும் தமிழ்நாடு மாணவர் கழகத்தினர் பங்கேற்றனர்.

**சேலத்தில்:** கரப்பான்பூச்சி ஜனதா கட்சி மற்றும் அனைத்து இந்திய இளைஞர்கள் அனைத்து இந்திய மாணவர்கள் காத்திருப்பு போராட்டம் ஜுலை 22, 2026 முதல் ஜுலை-24 வரை சேலம் மாவட்டம் தொடர்வண்டி நிலையம் அருகில் நடைபெற்றது. இரண்டு நாள் காத்திருப்பு போராட்டத்தில் சேலம் மாவட்டச் செயலாளர் டேவிட், தோழர்கள் சுதர்சன் மற்றும் ஆனந்தி கலந்து கொண்டனர்.

**பொள்ளாச்சியில்:** நீட் முறைகேட்டை கண்டித்து டெல்லியில் போராட்டம் செய்து வருகிற மாணவர்கள் மீது கண்மூடித்தனமாக தாக்கி வருகிற ஒன்றிய அரசைக் கண்டிக்கிறோம்! நீட் முறைகேடுகளுக்குக் காரணமான ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானே பதவி விலகு! எனும் முழக்கங்களோடு பொள்ளாச்சியில் ஜுலை-24, வெள்ளி மாலை 04 மணிக்கு காந்தி சிலை அருகில் ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. பொள்ளாச்சி கழகத் தோழர்கள் நிகழ்வை ஒருங்கிணைத்தனர்.





தி.க, திஇதபே, ததேவிஇ, திமுக, கொமக, தபுக, தமிழ்நாடு தன்னுரிமை மீட்பு இயக்கம், கல்லூரி மாணவர்கள் என பல்வேறு தோழமை இயக்கத் தோழர்கள் தங்களது கண்டனங்களை பதிவு செய்தனர்.

**வேலூரில்:** குடியாத்தத்தில் நீட்டை முற்றிலும் தடை செய்! கல்வி உரிமையை மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி வேலூர் மாவட்டக் கழகம் சார்பாக ஜுலை-26, ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் வழக்கறிஞர் இரா சிவா, தெருவிளக்கு கோபிநாத், அமல்ராஜ் அம்மாசி, பால குமரன் பார்த்தி ராஜி பாஸ்கர் செல்வகுமார் ஜெய்குமார், திரு.புரட்சி, திராவிடப் பாண்டியன்,ஜெய்பீம் தாமோதரன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

தொடர்ச்சி 4-ம் பக்கத்தில்

# வாஸ்துவை நம்பி கவிழ்ந்த முதல்வர்கள்

முதலமைச்சர் விஜய்யின் ஆஸ்தான சோதிடர் ரிக்கி ரத்தன் பண்டிட் வெற்றிவேல் ஆலோசனையில் முதலமைச்சர் அலுவலகம் நாமக்கல் கவிஞர் மாளிகைக்கு மாறுகிறதாம். மாநாடு கூட்ட அரங்கமாக இருந்த தளம் இப்போது அவசர அவசரமாக மாற்றி அமைக்கப்பட்டு வருகிறது. புதிதாக மாற்றியமைக்கும் பணியில் வாஸ்து பண்டிதர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். தொடர்ந்து உச்சத்தில் இருக்க வேண்டும் என்றால் உயரமான கட்டடத்திலும் முதலமைச்சரின் இருக்கை கிழக்கு முகமாகவும் இருக்க வேண்டும் என்பது ஜோதிடரின் ஆலோசனையாம். அது மட்டுமல்ல தற்போது முதலமைச்சர் பயன்படுத்தும் அறை வாஸ்துப்படி சரியில்லையாம்!




மக்கள் மீதான நம்பிக்கை தான் சக்தி வாய்ந்ததே தவிர, வாஸ்து சோதிட நம்பிக்கைகள் அல்ல! என்பதை முதலமைச்சர் உணர வேண்டும். வாஸ்து அறிவியல் தானா?

★ வாஸ்து ஒரு போலி அறிவியல். வாஸ்துப்படி கட்டப்பட்ட வீடுகளில் தான் வெற்றியும் மகிழ்ச்சியும் இருக்கிறது என்பதற்கு அறிவியல் ஆதாரம் இல்லை. நிலச்சரிவு என்றால் வாஸ்து கட்டிடம், வாஸ்து பார்க்காத கட்டிடம் எல்லாமே இடிந்து விழுகின்றன.

★ ஆக்கபூர்வ சக்தி, எதிர்மறை சக்தி என்று வாஸ்து கூறுகிறது. அந்த சக்திகளைக் கண்டறியும் அளவிடும் கருவிகள் எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. அப்படி அறிவியலாக எந்த சக்திகளும் இல்லை.

★ காலை வெய்யிலும் காற்றோட்டமும் வீட்டுக்குத் தேவை என்பது இயல்பான உண்மை. ஆனால் வாஸ்து இதை திசையை வைத்துப் பேசுகிறது. மின்சாரம், மின்விசிறி, குளிர்சாதன விஞ்ஞான வசதிகள் எதுவும் இல்லாத காலத்தில் பேசப்பட்ட கருத்துகள் இவை. இதை இப்போதும் பேசுவது அறிவியல் தானா? பல நாடுகள் கடலுக்குள்ளே கட்டிடங்கள் கட்டுகின்றனவே!

★ வாஸ்து நாட்டுக்கு நாடு மாறுபடுமா? சென்னையில் சூரியன் திசை ஆஸ்திரேலியாவில் மாறுபடுகிறது. அப்போது ஆஸ்திரேலியாவுக்கு தனியாக வாஸ்து இருக்கிறதா? உலக நாடுகளில் வாஸ்து பார்த்து கட்டடங்கள் கட்டப்படுவதில்லை!

★ பழைய காலத்தில் அடுப்புப் புகையை வெளியில் விடுவதற்கு சமையலறையை தென்கிழக்கில் வைத்தார்கள். இப்போது புகை அடுப்பு இல்லை; புகை வெளியேற்றக் கருவிகள் வந்துவிட்டன. எனவே இப்போதும் அந்தக் கருத்தைப் பிடித்து தொங்கிக் கொண்டிருக்க வேண்டுமா?

★ சென்னை நகரில் கடல் காற்று தெற்கு, கிழக்காக வீசுகிறது. படுக்கையறை; வரவேற்பு அறைகளை இந்த திசையை நோக்கி அமைப்பதே நல்லது. ஆனால் வாஸ்து சாஸ்திரப்படி இந்த திசையில் சமையலறை வைத்துக் கட்டுகிறார்கள். இது அறிவியல் தானா?

**வாஸ்து சோதிடத்தை நம்பும் முதல்வர் விஜய்**

★ ஆந்திர முதல்வராக இருந்த என். டி.ராமராவுக்கு ஒரு வாஸ்து ஆலோசகர் இருந்தார். அவரது பெயர் வி.என். ரெட்டி. முதலமைச்சர் அலுவலகத்துக்கு கதவு தெற்கே இருப்பது ஆபத்து! வடக்கே கதவு இருக்க வேண்டும் என்று கூறினார். அவரது ஆலோசனையை ஏற்று முதலமைச்சர் அலுவலகத்தின் திசையை மாற்றி அமைப்பதற்கு புதிதாக சாலையே போடவேண்டி இருந்தது. பலகோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு சாலை போட்டும் என். டி.ராமராவின் ஆட்சி கவிழ்ந்துவிட்டது.

★ தேவகவுடா பிரதமராக வந்தபோது பிரதமர் அலுவலகத்தில் இரண்டு படிக்கட்டு இருப்பது ஆபத்து; மூன்று படிக்கட்டுகள் வேண்டுமென்று வாஸ்து பண்டிதர்கள் கூறினார்கள். கட்டி முடிந்ததும் தேவகவுடா ஆட்சி கவிழ்ந்துவிட்டது.

★ ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது கடற்கரையில் இருந்த கண்ணகி சிலையை இரவோடு இரவாக அகற்றினார். கண்ணகி சீற்றத்துடன் நிற்கும் சிலை அருகே தலைமைச் செயலகம் இருப்பதால் ஆட்சிக்கு ஆபத்து வரும் என்று வாஸ்து பண்டிதர்கள் கூறியதே காரணம். ஆனாலும் தேர்தலில் ஜெயலலிதா தோற்றார். 2006-ல் ஆட்சிக்கு வந்த கலைஞர் அதே இடத்தில் கண்ணகி சிலையை நிறுவினார்.

★ வாஸ்து சாஸ்திரம் வர்ண பேதத்தையும் பேசுகிறது. பிராமணர்களுக்கு, சத்திரியர்களுக்கு, வைசியர்களுக்கு, சூத்திரர்களுக்கு தனித் தனியாக வீட்டுமனைகளை தேர்வு செய்ய வேண்டும் என்று கூறுகிறது. அதை இப்போது பலஅடுக்கு மாடி கட்டிடம் கட்டும் ஒப்பந்தக்காரர்களால் பின்பற்ற முடியுமா? விற்பனையிலும் இதைக் கூற முடியுமா?

★ வாஸ்துவைப் பார்ப்பனக் கடவுளாக்கிவிட்டது சாஸ்திரம். நெற்றியில் விபூதி, மார்பில் பூணூலோடு மல்லாந்து படுத்துத் தூங்குகிறார் வாஸ்து பகவான் என்றும், ஆண்டுக்கு 8 முறை மட்டுமே கண்விழிப்பார் என்றும் சாஸ்திரம் கூறுகிறது. வாஸ்துப்படி வீடு கட்டாதவர்களை துன்புறுத்துவார் என்றும் மிரட்டுகிறார்கள். ஆண்டுக்கு சில நிமிடங்கள் மட்டுமே கண்விழிக்கும் பகவான் ஒவ்வொரு வீட்டையும் கண்காணித்து எப்படி மக்களை மிரட்ட முடியும்?

வாஸ்து மூடநம்பிக்கைகளை விளக்கி இப்படி நீண்ட பட்டியல் போட முடியும். வாஸ்து அறிவியலுக்கு எதிரானது. மூடநம்பிக்கையில் மூழ்கியவர்கள் அதிகாரப் பதவியில் இருந்தால் அவர்கள் எடுக்கும் முடிவுகள் குழப்பங்களாகவே இருக்கும்.

- இரா

**தலையங்கம்**

# ‘சிகிச்சை வெற்றி; நோயாளி மரணம்’

எந்தப் போராட்டத்துக்கும் பணியமாட்டோம் என்ற ஒன்றிய ஆட்சியின் ஆணவத்தைப் பணிய வைத்திருக்கிறது இளைஞர்களின் சக்தி. டெல்லி ஜந்தர் மந்தரில் 25 நாட்கள் நடந்த போராட்டத்தை அலட்சியம் செய்து புறக்கணித்தவர்கள் சோனம்வாங்சூக் பட்டினிப் போராட்டம் தீவிரமடைந்த நிலையிலே தான் திரும்பிப் பார்த்தார்கள். விவசாய சட்டங்களை எதிர்த்து ஒன்றிய அரசுக்கு எதிராக டெல்லியில் ஓராண்டு விவசாயிகள் போராடினார்கள்; அதற்குப் பிறகுதான் ஒன்றிய ஆட்சி பணிந்தது. இப்போது இளைஞர்கள் போராட்டத்திற்கு ஒரு மாதத்திற்குள்ளே பணிந்து வந்திருப்பது மகத்தான வெற்றிதான். ஒன்றிய ஆட்சியினுடைய ஆதிக்கத்தை இளைஞர்களின் சக்தி குலைத்திருக்கிறது என்ற கண்ணோட்டத்தில் இது வரவேற்க வேண்டியதுதான். ஆனால் இந்த வெற்றி சமூக நீதிக்கு வலிமை சேர்த்திருக்கிறதா? என்றால் இல்லை. ‘சிகிச்சை வெற்றி; நோயாளி மரணம்’ என்றுதான் கூறவேண்டும்.

போராட்டக் குழுவினர் முதன்மையாக முன்வைத்த கோரிக்கை ஒன்றிய அமைச்சர் பதவி விலக வேண்டும்; நீட் தேர்வுகளை முறையாக நடத்த வேண்டும் என்பதாகவே இருந்தது. தமிழ்நாட்டில் மட்டும்தான் இதற்கு மாறாக நீட்தேர்வே வேண்டாம் என்ற கோரிக்கையுடன் போராட்டங்கள் நடந்தன. போராட்டத்தில் இறங்கிய இளைஞர்கள் மோடி ஆட்சியை மட்டுமே நேரில் பார்த்தவர்களாக இருந்ததால் நீட்தேர்வில் நிகழ்ந்த குளறுபடிகள் மட்டுமே அவர்களுக்கு தெரிந்தன. நீட்தேர்வு என்ற அமைப்பே ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்கு எதிரானது என்ற புரிதல் அவர்களுக்கு இல்லாமல் போய்விட்டது.

இந்தியாவை பார்ப்பனிய மயமாக்கும் முயற்சியில் இந்துத்துவ சக்திகளுக்கு முதலில் தேவைப்படுவது கல்வியை தங்களின் வேதமத சிந்தனைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதுதான். அந்த நோக்கத்தில்தான் கல்வியை மாநில உரிமைகளிலிருந்து படிப்படியாக பறித்து வருகிறார்கள். மாநிலங்களின் கட்டுப்பாட்டில் கல்வி இருந்தால் அது மாநிலங்களின் இயல்பான உணர்வை உள்வாங்கி சமூகநீதிப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும். ஒன்றிய ஆட்சியின் கீழ் இதைக் கொண்டு வந்துவிட்டால் அது தேசிய உணர்வாக மாற்றப்பட்டு பார்ப்பனியமயமாகி விடுகிறது. பார்ப்பனியத்தின் முகமூடிதான் தேசியம்.

கல்விக்கான நிதியும் படிப்படியாக குறைக்கப்படுகிறது. பள்ளிக் கல்விக்கு 50-விழுக்காடும், உயர்கல்விக்கு 33-விழுக்காடும் நிதி வெட்டப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்களுக்கு நிதி ஒதுக்குவதற்காக உருவாக்கப்பட்ட மானியக்குழு கடுமையான நிதிநெருக்கடிகளை உருவாக்கி வருகிறது. நிதி ஒதுக்குவது குறைந்ததால் பல்கலைக்கழகங்கள் கடன் வாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு வட்டிகட்ட வேண்டிய நிலையில் கல்விக் கட்டணங்களை உயர்த்தி வருகின்றன. கடந்த 12 ஆண்டுகளில் ஒரு இலட்சம் அரசுப்பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. அதே நேரத்தில் 43,000 தனியார் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. இவை ஆர்.எஸ்.எஸ் துணை அமைப்புகளால் நடத்தப்படுபவை.

சி.பி.எஸ்.இ என்ற ஒன்றிய அரசுப் பள்ளிகளில் 9-ம் வகுப்பில் மும்மொழியைக் கட்டாயமாக்கி இந்தி, சமஸ்கிருத்தைத் திணிக்கிறார்கள். இது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் பெற்றோர்கள் சார்பாக வழக்கு தொடரப்பட்டுள்ளது. உச்சநீதிமன்ற நீதிபதி 6-ம் வகுப்பில் இருந்தே மும்மொழித் திட்டத்தை கொண்டு வரலாம் என்று ஆலோசனை வழங்குகிறார். மூன்றாவது மொழியாக சமஸ்கிருதம் மட்டுமே தேர்வு செய்யப்பட வேண்டும் என்று ஒன்றிய ஆட்சி உறுதி காட்டுகிறது. அனைத்து சி.பி.எஸ்.இ பள்ளிகளில் சமஸ்கிருத ஆசிரியர்களும் வகுப்புகளும் கட்டாயம் இடம்பெற வேண்டும் என்று அறிவித்துள்ளது. 24,000 பேர் பேசும் சமஸ்கிருதத்தை கற்பிக்க 6,102 பார்ப்பன ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். 7கோடி மக்கள் பேசும் தமிழை கற்பிக்க 12 ஆசிரியர்கள் மட்டுமே நியமனம். இது நாடாளுமன்றத்தில் கல்வி இணை அமைச்சர் ஜெய்ந்த் சவுத்திரி மதுரை நாடாளுமன்ற சு.வெங்கடேசன் கேள்விக்கு அளித்த பதில்.

உயர்கல்வி முழுவதும் ஒன்றிய ஆட்சியின் கட்டுப்பாட்டில் கொண்டுவரும் ‘விக்சித் பாரத் சிக்ஷா அதிஷ்டான் (VBSA)’ என்ற மசோதா அறிமுகப்படுத்தப்பட்டு அது இப்போது பரிசீலனைக்காக நாடாளுமன்ற கூட்டுக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பாஜக ஆட்சி நடக்கும் மாநிலங்களும், ஆட்சிக்கு ஆதரவு தரும் ஆந்திரா அரசும் கூட இந்த மசோதாவை ஏற்க முடியாமல் எதிர்ப்புகளைத் தெரிவித்தன. ஆனாலும் சில திருத்தங்களோடு நாடாளுமன்றக் குழு ஒப்புதல் தந்துவிட்டது.

பாடத் திட்டங்கள், வரலாறுகள் மாற்றியமைக்கப்படுகின்றன; சனாதனத்திற்கு புதிய விளக்கங்கள் தரப்படுகின்றன. இஸ்ஸாமிய வரலாறுகள் முழுமையாக நீக்கப்பட்டுவிட்டன. ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன்பகவத் இந்துக் கடவுள்களின் பெருமைகளை பாடநூல்களில் சேர்க்க வேண்டும் என்று கூறுகிறார். இந்திய பாரம்பரிய கல்விமுறை என்று புதியகல்வித் திட்டத்தில் புதிய பாடத்திட்டத்தை உருவாக்கியுள்ளார்கள். காலனிய சிந்தனையிலிருந்து விடுவிப்பதே இந்தக் கல்விமுறையின் நோக்கம் என்றுகூறி மறுபிறப்பு, சோதிட மூடநம்பிக்கைகளுக்கு அறிவியல் விளக்கம் தரும் ஆய்வுகள் கான்பூர், காரக்பூர் போன்ற அய்.அய்.டி-களில் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தப் பிண்ணனியில் நீட் தேர்வையும் இணைத்துப் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டிலிருந்து மட்டுமே ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து மருத்துவர்களும் மருத்துவ நிபுணர்களும் பெருமளவில் வருகிறார்கள். நீட் தேர்வுமுறை இதை சீர்குலைக்கிறது. ‘சூத்திரர்’கல்வியை மனுநீதி தடை போட்டது. ‘நீட்’ கட்டுப்படுத்துகிறது. சமூக நீதிக்கான கல்வி அமைப்பை சனாதனத்திற்கான கல்விமுறையாக்கும் சூழ்ச்சி அரங்கேற்றப்படுவதோடு சமஸ்கிருதம் வழியாக பார்ப்பனியம் தொடர்ந்து திணிக்கப்படுகிறது. இந்த ஆபத்துகளை மாற்றத்தை விரும்பும் இளைஞர்களிடம் கொண்டு சேர்க்க வேண்டிய தேவை இருக்கிறது. நீட் எதிர்ப்பு இயக்கத்தை மாநில உரிமையோடும் பார்ப்பனிய எதிர்ப்போடும் இணைத்து இளைஞர்களிடம் கொண்டு சென்று அதற்கான வலிமையான இயக்கத்தை உருவாக்க வேண்டும்.

புரட்சியாளர் அம்பேத்கரை முன்னிறுத்தியே இளைஞர்கள் போராடினார்கள். அந்த எழுச்சி அம்பேத்கர் சிந்தனை வழியிலும் தொடர வேண்டும் என்பதே சமூகநீதியாளர்களின் எதிர்பார்ப்பு!

**உச்சநீதிமன்ற நீதிபதி கேள்வி**

# கங்கை ஆற்றில் அசைவம் குற்றமா?...

*“கங்கை ஆற்றில் சிக்கன் பிரியாணி சாப்பிடுவது குற்றமல்ல. அப்படியிருக்கையில், அதற்காக மூன்று மாதங்கள் ஒருவரை சிறையில் அடைத்தது எப்படி?,” என உச்ச நீதிமன்ற நீதிபதி உஜ்ஜல் புயான் சட்ட பல்கலை நிகழ்ச்சி ஒன்றில் கேள்வி எழுப்பினார்.*

*மத்திய பிரதேசத் தலைநகர் போபாலில் உள்ள தேசிய சட்ட பல்கலையில், உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி மறைந்த ஜி.பி.சிங்கின் நான்காம் ஆண்டு நினைவு சொற்பொழிவு நடந்தது. இதில், உச்ச நீதிமன்ற நீதிபதி உஜ்ஜல் புயான், ம.பி., உயர் நீதிமன்ற நீதிபதி விஷால் தகத் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர். நிகழ்ச்சியில், உச்ச நீதிமன்ற நீதிபதி உஜ்ஜல் புயான் பேசியதாவது:*

*ஜனநாயகத்தில் கருத்து சுதந்திரம், அமைதியான போராட்டம் போன்றவற்றை குற்றமாக பார்க்கும் போக்கு அதிகரித்து வருகிறது. சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டு, பிணை பெறுவதிலும் தாமதம் ஏற்படுகிறது.*

*கங்கை ஆற்றில் படகில் இப்தார் நிகழ்ச்சி நடத்திய இளைஞர்கள், மூன்று மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். கங்கை ஆற்றில் சிக்கன் பிரியாணி சாப்பிடுவது குற்றமல்ல. அப்படியிருக்கையில், குற்றமில்லா செயலுக்காக பல மாதங்கள் சிறையில் அடைத்தது ஏன்?*

*அமைதியான போராட்டத்தில் ஈடுபடும் மாணவர்களும் பல நாட்கள் காவலில் வைக்கப்படுகின்றனர். ஜாமின் வழங்கும் போது, பொதுக்கூட்டங்களில் பேசக் கூடாது, சமூக வலைதளங்களில் கருத்து தெரிவிக்கக் கூடாது போன்ற நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. சட்ட பல்கலை மாணவர்கள் கேள்வி கேட்கும் சூழலை உருவாக்க வேண்டும். கருத்து வேறுபாட்டை வெளிப்படுத்தியதற்காக மாணவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கக் கூடாது. இவ்வாறு அவர் பேசினார்.*

# தமிழ்மொழிக்கு மூன்றாவது இடமா?

*தமிழ்நாட்டில் தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது மிகப்பெரும் அவமானம்! பல்கலைக்கழகத்திற்கு மனோன்மணியம் சுந்தரனார் பெயரை சூட்டியவர் கலைஞர். அவர் எழுதிய தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை அரசு நிகழ்ச்சிகளில் பாட வைத்தவர் கலைஞர். அந்தப் பாடலுக்கு அரசாணை வழங்கியவர் திராவிட மாடல் ஆட்சி முதல்வர் மு.க.ஸ்டாலின்.*

*ஆளுநர் ஆர்.என்.ரவி தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலோடு தேசிய கீதத்தையும் பாட வேண்டும் என்று கட்டாயப்படுத்திய போது ஏற்க மறுத்தவர் முதல்வராக இருந்த மு.க.ஸ்டாலின். ஆளுநர் தான் அவையை விட்டு வெளியேறினாரே தவிர தமிழ்த்தாய் வாழ்த்து முதலிடம் பெறுவதை வெளியேற்ற முடியவில்லை.*

*விஜய் ஆட்சிக்கு வந்ததும் பதவியேற்பு விழாவிலேயே ’வந்தே மாதரம்’ முதன்மையிடம் பெற்றுவிட்டது. பேரவையில் ஆளுநர் உரையில் திராவிட மாடல் ஆட்சி தொடக்கத்தில் அனுமதிக்காத தேசிய கீதம் பாடலும் தமிழ் வாழ்த்துப் பாடலுடன் ஆளுநர் ரவி விருப்பம் போல் நிறைவேற்றப்பட்டு விட்டது.*

*உறுதியான எதிர்ப்பை வெளிப்படுத்தாத இந்த ஆட்சியின் மவுன மொழி தான் இப்போது தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை மூன்றாம் இடத்திற்கு தள்ளி இருக்கிறது. ஆளுநரின் பட்டமளிப்பு விழாவில் தமிழ்நாடு கல்வி அமைச்சர் கலந்து கொள்ளவில்லை என்ற செய்தியைத் தவிர ஏன் கலந்து கொள்ளவில்லை? என்ற காரணத்தை வெளியிட துணிவின்றி மவுனம் சாதிக்கிறார்கள். பாஜக ஆட்சியை நேரடியாக எதிர்க்கத் தயாராக இல்லை என்பதையே இந்த மவுனம் உறுதிப்படுத்துகிறது. இது தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை வஞ்சிக்கும் ஏமாற்று நாடகம். முதலமைச்சரின் மவுன மொழிகளுக்கு சொற்களைப் பொருத்திக் கொண்டிருக்கிறார்கள் அமைச்சர்கள். ஜனநாயகத்தின் உரிமைகளுக்கு "சைலன்ட் மோடு"போட முடியாது.*

*தமிழ் வாழ்த்துப் பாடலில் மனோன்மணியம் சுந்தரனார் எழுதிய"ஆரியம் போல் உலக வழக்கொழிந்து"என்ற பார்ப்பன சமஸ்கிருத எதிர்ப்பு வரிகளை பெருந்தன்மையுடன் கலைஞர் நீக்கினார் வாழ்த்து ப்பாடலில் வசவு வேண்டாம் என்று கலைஞர் கூறினார். அந்தப் பெருந்தன்மை இப்போது ஆரியத்துக்கு இல்லை;அதிகாரத் திமிரோடு தமிழைப் புறந்தள்ளுகிறது!*

*இனி தமிழ்நாட்டில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடும் போது விலக்கி வைத்த ஆரிய சமஸ்கிருத எதிர்ப்பு சொற்றொடரையும் இணைத்துப் பாட வேண்டும் இதுவே சமஸ்கிருத வார்த்தைகள் நிறைந்த ’வந்தே மாதரத்திற்கு’ காட்டப்படும் எதிர்வினையாக இருக்கும்.*

*- விடுதலை இராசேந்திரன்*
*28.07.2026*

# பெரியார் முழக்கத்தின் சிறப்பான பதிவுகள்

*பெரியார் முழக்கம் சிறப்பான செய்திகளை வெளியிட்டு வருகிறது. கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் "ஆண்மையும் வேண்டாம்; பெண்மையும் வேண்டாம்" என்ற தலைப்பில் தொகுத்துத் தந்த பெரியார் சிந்தனைகள்; "கட்சி மாறினால் பதவி; ஜாதி மாறினால் மரணமா? என்ற முகநூல் பதிவு; "சேலம் பல்கலைக்கழக துணைவேந்தராக பட்டியல் சமூகத்தினரை நியமக்க வேண்டும் என்ற கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை; உயிரற்ற பொருளிலிருந்து உயிரை உண்டாக்கி கடவுள் சக்தியை விடைபெற வைத்த செய்தி, ‘பாஜகவின் சூழ்ச்சிகர அரசியல்’ தலையங்கம்; நூறுசாமி திரைபடம் உருவாகக் காரணமாக இருந்த பெரியார் சிந்தனை என்ற செய்தி அனைத்தும் மிகச்சிறப்பு.*

***மு.சாமிநாதன் (குமாரபாளையம்)***
***நாமக்கல் மாவட்டத் தலைவர்***

# வாழ்வியலை சிதைக்கும் மூடநம்பிக்கைகள்

*பேய், பில்லி, சூனியம், சோதிடம், தீ மிதி, மூடநம்பிக்கைகளுக்கு எதிரான அறிவியல் விளக்கம்.*

## பேய், பிசாசு, ஆவிகள் உண்மையில் இருக்கின்றனவா? இவற்றை ஏவி விடவும் தடுக்கவும் பில்லி, சூனியம், செய்வினை மூலம் முடியுமா?

இந்து, முஸ்லிம், கிறித்துவம் உள்ளிட்ட எல்லா மதத்தாரும் பேய், பிசாசு, ஆவிகளை நம்புகிறார்கள். இந்து மதத்தில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒவ்வொரு விசேடமான பேய் பிசாசு இருப்பதும், பூசாரிகளைக் கொண்டு அவற்றை விரட்ட முயல்வதும் பொதுவான அம்சமாகும். கிறித்துவ மதத்தின் 'புனித' நூலாகக் கருதப்படும் பைபிளிலும், இஸ்லாம் மதத்தின் 'புனித' நூலாகக் கருதப்படும் குர்-ஆனிலும் பேய் பிசாசுகள் உண்டு. இன்றும் தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் கிறித்துவ மத போதகர்களால் 'சரீர சுகமளிக்கும்' கூட்டங்களில் பேய் விரட்டும் நிகழ்ச்சிகளைக் காணலாம். கத்தோலிக்க மதத் தலைவர் 'போப்பும்' பேய் விரட்டலுக்கான சில நெறிமுறைகளை அறிவித்திருக்கிறார். ஏர்வாடி ஊரிலுள்ள முஸ்லீம் தர்கா பேய் விரட்டலுக்குப் பிரபலமான இடமாகக் கருதப்படுகிறது.

இந்த 'பேய் விரட்டல்' போட்டியில் வெற்றிபெற்றவர் யார் என்று சொல்லமுடியாத வண்ணம் மூன்று மதத்தைச் சேர்ந்தவர்களாலும் பேய் விரட்டல் இன்றும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.

பொதுவாகத் தற்கொலை செய்துகொண்டவர்கள், பிறரால் கொல்லப்பட்டவர்கள், விபத்தால் இறந்தவர்கள் போன்றோர் பேயாக. ஆவியாக உலவுவதாக நம்பப்படுகிறது. விபத்தால் அல்லது உணவுக்காகக் கொல்லப்படும் ஆடுகள், கோழிகள், மாடுகள் போன்ற பிராணிகள் 'ஆவியாக, பேயாக' உலவுவதாக பொதுவாக யாரும் நம்புவதில்லை. இதுபோல் கொல்லப்படும் தாவரங்களும் பேயாக, ஆவியாக உலவுவதாக யாரும் நம்புவதில்லை. "பேயைப் பார்த்தேன்" எனத் தனி நபர்கள்தான் கூறி உள்ளனர். ஒரு குழுவினரோ அல்லது நான்கைந்து நபர் சேர்ந்தோ இதுவரை பார்த்ததாகத் தகவல் இல்லை.

இந்தப் பேய், பிசாசு, ஆவிகள் படித்த அய்.ஏ.எஸ். அதிகாரிகளை, அய்.பி.எஸ். அதிகாரிகளை, மருத்துவர்களை, பொதுவாகப் படித்த ஆண்களைத் தொல்லை செய்வதில்லை. அதேபோல் பார்ப்பனஆண்களையும், பெண்களையும் தொல்லை செய்வதில்லை. இன்றுவரை இவர்களையெல்லாம் ஏன் பேய், பிசாசு ஆவிகள் தொல்லை செய்யவில்லை என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் இதேபோல், பிசாசு ஆவிகள் கிராமப்புற மக்களை அதிலும் படிப்பு அறிவு இல்லாதவர்களை அதிலும் பெரும்பாலும் பெண்களையே தொல்லை செய்வது ஏன்? இவையெல்லாம் தோழர் பெரியார் இந்நாட்டு மக்களை நோக்கி எழுப்பிய கேள்விகள் ஆகும்.

அடுத்து இந்தப் பேய், பிசாசு, ஆவிகள் ஆகியவற்றின் தொல்லைக்கு உள்ளானவர்கள் நிலையைப் பார்ப்போம். இவர்களில் சிலர் பேய், பிசாசு, ஆவியைப் பார்த்ததாகவும், சலங்கை ஒலியைக் கேட்டதாகவும், கடவுள் காட்சி கொடுத்ததாகவும் சொல்வார்கள். இவர்கள் பொய் சொல்லவில்லை. தாம் உணர்ந்ததைச் சொல்கிறார்கள், எனவே இவர்களைப் பொய்யர்கள் என்று அவசரப்பட்டு முடிவுசெய்ய வேண்டியதில்லை. அப்படியென்றால் இவையெல்லாம் உண்மையா? அதாவது பேய். பிசாசு, ஆவிகள் இருப்பது உண்மையா? என்ற கேள்விகள் எழலாம். மேற்சொன்னவை எல்லாம் புலன்களை ஏமாற்றும் உணர்ச்சிகளே (Deceptive Perceptions) ஆகும்.

## ஜாதகம் மூலம் எதிர்காலத்தைக் கணிப்பது உண்மையா?

'பேய்', பிசாசு, ஆவிகள் பெரும்பாலும் கிராமப்புறங்களைப் பாதிப்பவை ஆகும். நகர்ப்புறம், கிராமப்புறம், படித்தவர் படிக்காதவர் என்ற வேறுபாடு இன்றி நிலைபெற்றுள்ள மூடநம்பிக்கை ஜாதகமாகும்.

கி.மு.3000க்கு முன்பே இந்தியா, சீனா, பாபிலோன், மெசபட்டோமியா ஆகிய நாடுகளில் 'ஜாதகம்' வளர்ந்த நிலையில் இருந்தது. ஒரு மனிதன் பிறக்கும்போது கோள்கள் (கிரகங்கள்) இருக்கும் நிலைகளைக் கணித்து, அவன் வாழ்வை நிர்ணயிக்கும் முயற்சியே 'ஜாதகம்' எனப்படுகிறது. மிகப் பழங்காலத்தில் வானவியல் பற்றிய சரியான உண்மைகள் தெரியாத காலத்தில் உருவான ஜாதகம் இன்னும் அதேநிலையில் இருக்கின்றது.

எடுத்துக்காட்டாக சூரியன் என்பது ஒரு நட்சத்திரம் என்ற உண்மையும், சந்திரன் ஒரு துணைக்கோள் என்ற உண்மையும் ஜாதகக் கணிப்பில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. பூமியைப்போல சூரியனையும், சந்திரனையும் கோள்களாகவே ஜாதகக் கணிப்பில் எடுத்துக்கொள்கின்றனர். ஜாதகத்தில் கூறப்படும் பன்னிரெண்டு வீடுகளும் உண்மையில் கிடையாது. வானத்தையும் தமது விருப்பத்திற்கு ஏற்றவகையில் பிரித்து வைத்துள்ளனர். உண்மையில் இருக்கும் நெப்டியூன், யுரேனஸ், புளுட்டோ ஆகிய கோள்களை ஜாதகக் கணிப்பில் எடுத்துக்கொள்வது இல்லை. இராகு கேது என்று இல்லாத இரண்டு கோள்களும் ஜாதகக் கணிப்பாளர்களின் கற்பனையில் மட்டுமே இருக்கும்.

ஜாதகக் கணிப்பாளர்கள் ஒரு வினாடி தவறினால்கூட கணிப்பு தவறும் என்கிறார்கள். ஜாதகக் கணிப்பில் உள்ள சில நட்சத்திரங்களில் இருந்து நமக்கு ஒளி வந்து சேருவதற்கு பல ஆண்டுகள் ஆகும். மேலும் வீனஸ் என்ற கோளின் உண்மை நிலைக்கும், நமக்குத் தெரியும் நிலைக்கும் இடையில், ஆறு நிமிட நேர வேறுபாடு இருக்கிறது. இதுமட்டுமல்ல மகப்பேறு மருத்துவமும், அறுவை சிகிச்சையும் குழந்தை பிறக்கும் காலத்தினை விரைவுபடுத்தவோ நீட்டிக்கச் செய்யவோ இயலும் அளவுக்கு வளர்ந்துள்ளது. 'நல்ல நேரத்தில்' அறுவை சிகிச்சை செய்து குழந்தையைப் பெற்றெடுக்கும் நடைமுறை தற்போது உள்ளது. எனவே, ஒரு குழந்தையின் எதிர்காலத்தை மகப்பேறு மருத்துவர் நிர்ணயிக்க முடியும் என்று சொல்லலாமா? மேலும் குழந்தை பிறக்கும் நேரம் எது என்பதை ஜாதகக் கணிப்பாளர்கள் சரியாகச் சொல்வதில்லை. பிறப்பு உறுப்பில் இருந்து குழந்தையின் தலை வெளியில் வரும் நேரமா? கால் வெளியில் வரும் நேரமா? தொப்பூழ் கொடியை வெட்டும் நேரமா? இவற்றுள் எது குழந்தை பிறந்த நேரம்?

ஜாதகக் கணிப்பில் உள்ள விவரங்கள் வானவியல் உண்மைகளுக்குப் புறம்பானவை, பிறந்த நேரத்தினை நிர்ணயிப்பதில் கோளாறு. மேலும் ஜாதகம். கைரேகை போன்ற எதிர்கால நிர்ணயிப்பாளர்கள் தமது கணிப்புகளை சற்றே குழப்பமான மயக்கமான சொற்களைக் கொண்டே சொல்வர். கணிப்பு தவறினால் சோதிடர் தப்பிக்க பிறந்த நேரக் கோளாறும், குழப்ப வார்த்தைகளும் ஜாதகக் கணிப்பாளர்களுக்கு துணைபுரிகின்றன. ஜாதகக் கணிப்பு கைரேகை முறையைக் கற்றுத் தேர்ந்த டாக்டர் கோவூர். ஜாதகம், கைரேகை மோசடிகளைத் துணிச்சலுடன் அம்பலப்படுத்தி சவால் விட்டார். பெங்களூர் பி.வி.ராமன் உள்ளிட்ட எந்த ஜாதக கைரேகை கணிப்பாளர்களும் கோவூரின் சவாலை சந்திக்கத் துணியவில்லை. கைரேகை பலன் உண்மையானால் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை கிடைக்குமா? இராணுவத்தில் சேருவதற்கான தகுதியாக ஆயுள் ரேகை பலமாக இருக்கவேண்டும் என்பதை அரசு கடைப்பிடிக்குமா? ஆயுள் ரேகை பலமாக உள்ளவர்கள் விமானத்தில் இருந்து பாராசூட் இல்லாமல் குதித்து ஆயுள் ரேகையின் மகிமையை மெய்ப்பிப்பார்களா?

இதேபோன்ற மோசடிதான் கம்ப்யூட்டர் சாதகமும் ஆகும். அறிவியல் முன்னேற்ற நவீன கருவியான 'கம்ப்யூட்டர்' மூலம் தற்போது மக்களிடையே மூடநம்பிக்கையைப் பரப்பி வருகின்றனர். கம்ப்யூட்டரில் மனிதனே தேவையான செய்திகளைச் செலுத்தி அவரவர் சாதகத்திற்குத் தகுந்தாற்போல் செய்தியை வரவழைப்பது ஒரு நூதன மோசடியாகும்.

## தீ மிதித்தலை அறிவியல்மூலம் விளக்கமுடியுமா?

முடியும். இது கடவுள் சக்தியால் விரதம் இருந்து செய்யப்படும் செயலாக நீண்டநாட்களாக நம்பப்பட்டு வந்தது. இந்த மூடநம்பிக்கையை பகுத்தறிவாளர்கள் அம்பலப்படுத்தி வருகின்றனர். எல்லோராலும் செய்யக்கூடிய செயலே இது என்பது நிரூபித்துக் காட்டப்பட்டாகி விட்டது.

நெருப்பின்மீது நடக்கும்போது காலில் உள்ள ஈரமானது நெருப்பில் பட்டு ஆவியாகி காலுக்கும் நெருப்புக்கும் இடையே ஆவித்திரை உருவாகிறது. இந்த ஆவித்திரையைக் கடந்து வெப்பம் காலைச் சுடுவதற்கு சில வினாடிகள் ஆகும். அதற்குள் காலை எடுத்து விட்டால் ஆபத்தில்லை.

தீ மிதிக்கும் முன் நன்கு கிளறி, தட்டிவிட்டு சாம்பல் இல்லாமல் இருக்கும்போதுதான் நடக்கவேண்டும். சாம்பல் இருந்தால் அது காலில் ஒட்டிக்கொண்டு காலைச் சுடும். (தீமிதி நடக்கும் இடங்களில் இதுபோல் சாம்பல் இல்லாமல் நெருப்பு சிவப்பாக இருக்கும் காட்சியைக் காணலாம்).

1. தீயின்மேல் நடக்கும் பக்தர்கள் அதன்மேல் தொடர்ந்து குறைந்தபட்சம் 10 நிமிடம் நிற்பார்களா? இயலாது.

2. மரத்துண்டால் ஆக்கப்பட்ட நெருப்பில் நடக்கும் பக்தர்கள் உலோகத் தகட்டை வெப்பப்படுத்தி அதன்மீது நடக்கத் தயாரா? - முடியாது.

(தாய்லாந்து போன்ற வெளிநாடுகளில் பக்தி முற்றிய நிலையில் சில புத்த பிட்சுகள் எரியும் நெருப்பில் தாண்டி வருவதாக கூறி இறந்து போயுள்ளனர்.)

## தீச்சட்டி எடுத்தலை அறிவியல்மூலம் விளக்க முடியுமா?

முடியும். சட்டியின் அடியில் வெப்பம் கடத்தாப் பொருள்களைப் போட்டு அதன்மேல் நெருப்பினை எரியச்செய்து தூக்கினால் சட்டி பொறுக்கமுடியாத அளவுக்கு சுடாது. மேலும் தீச்சட்டி ஏந்துபவர்கள் சட்டியை அடிக்கடி அடுத்த கைக்கு மாற்றிக் கொள்வார்கள், மண்பானைக்குள் தெருப்பைப் போட்டு தீச்சட்டி எடுக்கும் பக்தர்கள் உலோகத்தால் ஆன (செம்பு, எவர்சில்வர்) குடத்தில் நெருப்பைப் போட்டோ அல்லது சுடுதண்ணீரை ஊற்றியோ கையில் ஏந்திவர இயலாது

## பூப்பு நீராட்டு விழா நடத்துவதும், மாத விலக்கு நேரங்களில் பெண்களை 'தீட்டு' என்று ஒதுக்கி வைப்பதும் சரியா?

பூப்பு நீராட்டு விழா என்பது சம்பந்தப்பட்ட பெண் உடற்கூறு ரீதியில் உடலுறவிற்கும் அதன்மூலம் கருவுருவதற்கும் தயாராகி விட்டாள் என்பதை உணர்த்தும் அறிவிப்பேயாகும். நாகரீகம் வளர்ச்சி பெறாத நிலையில் தகவல் தொடர்புமுறை பின்தங்கி இருந்த நிலையில் பழங்காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த இச்சடங்கினை இன்றும் தொடர்வது அநாகரீகமான, பெண்களை இழிவுபடுத்தும் செயலாகும். இதுபோல் உடற்கூறு ரீதியில் உடலுறவிற்கும், பெண்ணைக் கருவுறச் செய்வதற்கும் தயாரான ஆணிற்கு இத்தகைய சடங்குகள் செய்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பெண்களைப் பொருளாக பாவிக்கும் ஆண் ஆதிக்க செயல்பாடே - இந்நிகழ்ச்சியின் வெளிப்பாடு ஆகும்.

மாத விலக்கு என்பது சிறுநீரைப்போல், மலத்தைப்போல் உடலிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருளேயாகும். (சிறுநீரையும் மலத்தையும் சுகாதாரமான முறையில் தூய்மைப்படுத்துவதுபோல், மாதவிலக்கையும் சுகாதார முறையில் தூய்மைப்படுத்த பல்வேறு வசதிகள் வந்துவிட்டன) இத்தகைய மாத விலக்கு காலத்தை 'தீட்டு' என்று கூறுவது பெண்களை இழிவுபடுத்தும் மூடநம்பிக்கையாகும்.

**நன்றி: பெரியார் மய்யம் வெளியீடு**

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# காரைக்குடி அழைக்கிறது! தோழர்களே தயாராவீர்!



கழகத்தின் பரப்புரைக்கு தோழர்கள் மிகுந்த உற்சாகத்தோடு தயாராகி வரும் செய்திகள் வருகின்றன.

ஆணவப் படுகொலைகள் மனித மாண்புகளையும் கொலை செய்கின்றன.

ஜாதியை மறுத்து வாழத் துடிக்கும் இளம் பிஞ்சுகளின் உயிரைத் துடிக்கத் துடிக்கப் பறிக்கின்றன. ஜாதிவெறியின் இரத்தப் பசி அடங்கவில்லை.

சமூக ஒருங்கிணைப்பை மானுட ஒற்றுமையை ஜாதி என்னும் நச்சு சீர்குலைக்கிறது.

கட்சிகளுக்கும் இயக்கங்களுக்கும் இது தெரியாதா? தெரியும்! ஆனாலும் வாக்கு வங்கி அரசியல் நியாயங்களைப் பேச மறுக்கிறது.

இந்த நிலையில் தான் பெரியார் தந்த ஜாதி எதிர்ப்பு என்ற கொள்கைச் சுடரை ஏந்தி இலட்சியப் பெருமிதத்தோடு கழகத் தோழர்கள் பயணம் புறப்படுகிறார்கள்.

ஆகஸ்ட் 12-ல் காரைக்குடியில் நிறைவுவிழா மாநாட்டில் ஒவ்வொரு கழகத் தோழர்களும் கழக ஆதரவாளர்களும் திரளவேண்டும்!. குடும்பத்துடன் பங்கேற்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

காரைக்குடி கருஞ்சட்டை கடலில் மிதக்க வேண்டும்!

கழகத்தின் வலிமையை உணர்த்த வேண்டும்!.

# பால்.பிரபாகரன் கண்டனம்!

## நீட் எதிர்ப்பை நீர்த்துப் போகச்செய்கிறார் முதல்வர் விஜய்!

நீட் போராட்டத்தின் நியாயத்தை உணராமல் மாணவர்களை வாட்டி வதைக்கிறது ஜோசப் விஜய் அரசு. நீட் தேர்வை எதிர்க்கிறோம் என ஒரு வார்த்தையில் சொல்லிவிட்டுப் போராடிய மாணவர்களைத் தாக்கியது மட்டுமல்ல; போராட்டத்தை நீர்த்து போகச் செய்யும் பணியைத் தனது அமைச்சர்களைக் கொண்டு செய்கிறார்.

மாணவர் போராட்டத்தைத் திசை திருப்பி ஜூலை 23-ம் தேதி வெளியான ஜனநாயகன் திரைப்படத்தை கோலாகலமாக கொண்டாடுங்கள் என ஒரு அமைச்சர் அறிக்கை கொடுக்கிறார். ஜூலை-22ம் தேதி இரவு தமிழ்நாடு முழுவதும் திரையரங்கம் முன்பு தமிழ்நாட்டு மாணவர்கள் இளைஞர்கள் பாலாபிசேகம் செய்வதும் 150 ரூபாய் டிக்கெட்டை 1000, 1500-க்கு வாங்கி செல்வதுமான அவலநிலையைக் காண முடிந்தது. முற்போக்கான மாநிலம் தமிழ்நாடு என்றும் அது உரிமைகளுக்கு முதலாவதாக போராடும் என்ற வரலாற்றை மாற்றி தமிழ்நாட்டு மாணவர்கள் இளைஞர்களைத் தற்குறிகளாக மாற்றும் வேலையை ஜோசப் விஜய் அரசு செய்கிறது.

வடமாநிலங்களைப் பிற்போக்கு சிந்தனை கொண்டவர்கள் என வசை பாடினோம் அவர்கள் தங்கள் உரிமைக்காக உயிரைப் பணயம் வைத்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டு இளைஞர்களைத் திரையரங்க வாசலில் குத்தாட்டம் போட வைக்கிறது இந்த அரசு. தூய்மைப் பணியாளர் போராட்டத்தின் போது மேனாள் முதலமைச்சர் கூலி படம் பார்க்கப் போகலாமா? என கேட்ட அன்றைய நடிகர் ஜோசப் விஜய் இன்று முதலமைச்சர் ஆன பின்பு ஜனநாயகன் திரைப்படம் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

ஒரு அமைச்சர் திரைப்படம் பார்க்க விடுமுறை கேட்கிறார், கல்வியில் முன்னணி மாநிலமான தமிழ்நாட்டை விஜய் அரசு கீழ் நோக்கி இழுத்துச் செல்கிறது. தமிழ்நாட்டின் அமைச்சரவை இன்று திரையரங்கில் சென்று கேக் வெட்டுவதும் திருவிழா போன்று தான்வகிக்கும் பொறுப்பை மறந்து கூத்தடிக்கிறார்கள். அமைச்சர்கள் திரைப்படம் பார்க்கக் கூடாது என்பதல்ல; ஒரே நாளில் அனைத்து அமைச்சர்களும் திரைப்படம் காண திரையரங்கில் கிடப்பது தமிழ் மக்களைத் திசைதிருப்பும் செயலாகும்.

புதிதாக எந்தத் திட்டத்தையும் நிறைவேற்றாமல் முந்தைய அரசின் திட்டங்களைப் பெயர் மாற்றம் செய்யும் பணியை மட்டுமே செய்யும் இந்த மைனாரிட்டி குதிரை பேர அரசு தமிழ்நாட்டின் இளைஞர்கள் மாணவர்களைத் தவறாக வழி நடத்துவதைக் கண்டிக்கிறோம்.

# நங்கவள்ளியில் கழகத் தோழர்கள் அமைச்சரிடம் கோரிக்கை மனு!

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம் நங்கவள்ளியில் உள்ள பள்ளி மாணவ, மாணவிகள் நேரத்துக்குப் பள்ளி, கல்லூரிக்குச் செல்லவும், பள்ளி முடிந்த பின் பாதுகாப்பாக வீடு திரும்பவும் ஏதுவாக பேருந்து நேரத்தை மாற்றி அமைக்க வேண்டும் என வலியுறுத்தி, சேலம் மாவட்டக் கழக ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், நங்கவள்ளி நகரச் செயலாளர் சந்திரசேகர் ஆகியோர் 20.07.2026 அன்று தமிழ்நாடு போக்குவரத்துத் துறை அமைச்சர் தமிழன் பார்த்திபனிடம் மனு அளித்தனர்.



அமைச்சர், கழகத் தோழர்களின் கோரிக்கையை பரிசீலித்து இரண்டு நாளுக்குள் பேருந்துகள் சரியான நேரத்தில் இயக்கப்படும் என உறுதியளித்தார்.

முதல் பக்க தொடர்ச்சி..

**சென்னை:** ஜூலை-22, அன்று மாலை 4:30 மணிக்கு, தமிழ்நாடு மாணவர் கழகத்தின் சார்பில் சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பேரன்பு தலைமையில், தோழர்கள் ஷர்மிளா - குடிஅரசு ஆகியோர் முன்னிலையில், சென்னை சிம்சன் பெரியார் சிலை அருகே, கண்டன முழக்க ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வடசென்னை மாவட்டக் கழகத் தலைவர் சேத்துப்பட்டு இராசேந்திரன், அசாருதீன் (பூவுலகின் நண்பர்கள்), இரண்யா, ஆதன் (தமிழ்நாடு மாணவர் கழகம்)ஆகியோர் கண்டனவுரையாற்றினர். இந்நிகழ்வில் 50க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர்.




**பாலன் இல்லத்தில்:** ஜூலை-24,2026 அன்று காலை 10:30 மணிக்கு, சென்னை தியாகராய நகர் பாலன் இல்லத்தில், கரப்பான்பூச்சி கட்சியினர் நீட்டை எதிர்த்து நடத்திவரும் போராட்டத்தில், கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மைனர் (யூ2 புரூடஸ் வலையொளி), பங்கேற்று கண்டனவுரையாற்றினர். கு. அன்பு தனசேகர் (தலைமைக் குழு உறுப்பினர்),ஆ. வ. வேலு (மாவட்டத் துணைச் செயலாளர்), பகுதிக்கழக நிர்வாகிகள், தோழர்கள் 50க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

**புதுப்பேட்டை:** நீட்டைத் தடை செய்யக்கோரி, தமிழ்நாடு மாணவர் இளைஞர் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பில், பல்வேறு இயக்கங்கள் இணைந்து, ஜூலை-26,2026 மாலை 4 மணிக்கு, புதுப்பேட்டை லாங்க்ஸ் கார்டன் சாலையில் பேரணி நடைபெற்றது. பேரணியைத் தொடர்ந்து பொதுக்கூட்டம் நடத்தினர். பேரணியில் 500 -க்கும் மேற்பட்ட மாணவர்கள், இளைஞர்கள், முற்போக்கு இயக்கத் தோழர்கள் பங்கேற்றனர். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மருத்துவர் எழிலன், பேராசிரியர் ஜவாஹிருல்லா, மே-17 நிறுவனர்.திருமுருகன் காந்தி, பூவுலகின் நண்பர்கள் சுந்தர்ராஜ், ஊடகவியாலளர்கள், பத்திரிக்கையாளர்கள், எழுத்தாளர்கள், திரைக் கலைஞர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றுப் பேசினர்.

தபசி குமரன் (தலைமை நிலையச் செயலாளர்), இரா. உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்), மா. வேழவேந்தன் ( மாவட்டத் தலைவர்), மாவட்ட அமைப்பாளர்கள் ம.கி. எட்வின் பிரபாகரன், ந. தட்சிணாமூர்த்தி, மாவட்டத் துணைச் செயலாளர்கள் ஆ.வ. வேலு, இராவணன், ப. அருண் (இளைஞரணி அமைப்பாளர்), பேரன்பு (தமிழ்நாடு மாணவர் கழக சென்னை ஒருங்கிணைப்பாளர்), இளவரசன் (அமைப்பாளர் தமிழ்நாடு மாணவர்கழகம்), சு. கோபிநாத் (திருவல்லிக்கேணி பகுதித் தலைவர்), பகுதி அமைப்பாளர்கள் த.நா. சூர்யா, ராஜன், மயிலை தோழர்கள்: மனோகர், சிவா, ப்ரவீன் ஏகேஎஸ், பிரசாந்த், ஷர்மிளா, கார்த்தி ராஜேந்திரன், சு. பிரகாஷ், கக்காஷி, இரண்யா, பரணி, மகிழவன், ஹரி, தினகரன், இளவரசன், மஞ்சுநாதன், பண்பாளன், சஞ்சய், தீபக், செந்தில், செல்வன், அஜய் உள்ளிட்ட 60-க்கும் மேற்பட்ட கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : July-30, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran